## அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் -2013

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் (283 அதிகாரம்) மற்றும் 1983 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க அதிகாரச்சட்டத்தின் 18 (2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. விபரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை சங்கத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதற்காக ஏற்ற நிலையை அடைந்த நாள் முதல் குறைத்தெழுதப்படும் நாள் வரை பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் குறைத்தெழுதப்பட்ட ஆண்டின் போது உரிய காலப்பகுதிக்காகப் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) காலஞ்சென்ற மற்றும் அங்கத்துவத்தை இழந்த அங்கத்தவர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 2,028,593 ஆகக் காணப்பட்டது. இத் தொகையில் ரூபா 1,784,822 தொகை 01 ஆண்டு முதல் 05 ஆண்டு காலப்பகுதியில் நிலுவையாகக் காணப்பட்டதுடன் 71 அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,489,217 தொகையில் எவ்வித தொகையும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக கடன் வட்டி மற்றும் திரண்ட தொகையை செலுத்தத் தவறிய 20 அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 849,023 தொகையும் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. இதன் பிரகாரம், இக் கடனை அறவிடுவது நிச்சயமற்ற நிலையில் இருந்த போதிலும் இது தொடர்பாக போதிய ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நன்கொடை கொடுப்பனவுகளைத் தவிர்த்தமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 16,735 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 மார்ச் 22 ஆம் திகதி காலஞ்சென்ற அங்கத்தவர் ஒருவரிடமிருந்து சங்கத்திற்கு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 44,334 தொகைக்காக 2012 ஏப்ரல் மாதத்தின் போது கடன் தவணைப்பணமாக ரூபா 4,194 தொகை பெறப்பட்டிருந்த

போதிலும் அங்கத்தவர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் தொகையில் அக் கடன் தவணைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனால் அறவிடப்பட வேண்டிய கடன் தொகையான ரூபா 4,194 தொகை கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அநுராதபுரம் ஓய்வு விடுதியைத் திட்டமிடுவதற்காக ஆலோசனைக் கம்பனிக்குச் செலுத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 425,139 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கடன்பட்டோராக கணனி அறிக்கையில் காண்பிக்கப்பட்ட ஏழு அங்கத்தவர்களின் ஆரம்ப மீதிக்கும் கடன்பட்டோர் பட்டோலையில் காண்பிக்கப்பட்ட அந்த மீதிக்கும் இடையில் ரூபா 37,979 கூட்டுத்தொகையான வேறுபாடுகள் காணப்பட்டன.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒவ்வொரு அங்கத்தவராலும் மரண உதவுதொகை நிதிக்கு ஒவ்வொரு மாதத்திற்கும் ரூபா 25 படி அல்லது 50 ஆண்டுகள் பூர்த்தியானதை அடுத்து ரூபா 5 படியான உதவுதொகைத் தவணைப்பணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதிக்கு 03 மாதம் முதல் 01 ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரித்தான 3 அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 1,155 தொகையும் அங்கத்துவத்தை இழக்கும் கடிதத்தை அனுப்பிய 8 அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 15,580 தொகையான உதவுதொகைப் பங்களிப்புத் தொகையும் அறவிடப்படாதிருந்தது.

(ஆ) 03 மாதங்கள் முதல் 01 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய 38 அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 152,271 தொகையான பங்களிப்புத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படாதிருந்தது.

(இ) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் நியதிச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) விதி இல. 14 இன் கீழ் முன்னைய ஆண்டின் இறுதித் தினத்திற்கு பெறவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 98,307 தொகையான உதவுதொகைக் கடனுக்கான வட்டி மரண உதவுதொகைக் கொடுப்பனவில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் வகைப்படுத்தப்படாது அனுப்பும் கணக்கில் ரூபா 1,029,761 தொகையும் பல்வேறு சீராக்கற் கணக்கில் அங்கத்துவக் கடனுக்கான ரூபா 574,672 தொகையும் தீர்க்கப்படாதிருந்தது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | கணக்குகளின் படி மீதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| வகைப்படுத்தப்படாத அனுப்புதல்கள் | 931,664 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள், தனியான மீதிப் பட்டியல் |
| அங்கத்துவம் இழக்கப்பட்டவர்களது அங்கத்துவப் பணம் | 14,087,460 | |
| செலுத்தப்பட வேண்டிய இறப்பு உதவுதொகை | 2,705,000 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| பொது வைப்புக்கள் | 98,096 | |
| சேவைகளுக்காகக் கிடைத்த முற்பணம் | 67,386 | |
| செலுத்த வேண்டிய கடன் | 75,408 | |

| | | |
|---|---|---|
| நானாவித கடன்பட்டோர் | 2,073,269 | |
| அங்கத்துவர்களுக்கான கடன் | 656,120,290 | கடன் காலப்பகுப்பாய்வு |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 65,985 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள், உடன்படிக்கைகள், வைப்புகளுக்குரிய மூல ஆவணங்கள் |
| சட்டத்தரணிகள் கட்டணமும் மதிப்பீட்டுக் கட்டணங்களும் | 64,674 | கடன் விண்ணப்பதாரர்கள் தொடர்பான விபரங்கள், காலப்பகுப்பாய்வு |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் திருத்திய நியதிச் சட்டம் | |
| (i) 10 (அ)(ii) ஈ பிரிவு | இறப்பு உதவுதொகை விருத்தி ஓதுக்க நிதிய மிகைத் தொகை, திறைசேரியின் உடன்பாட்டுடன் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் இந் நிதியத்திற்கும் ஏனைய நிதியக் கணக்கிலும் உள்ள ரூபா 68,415,353 கூட்டுத்தொகையான தொகை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் திருத்தப்பட்ட நியதிச்சட்டத்தின் படி திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 10 (1) ஆம் பிரிவு | அங்கத்தவர் ஒருவரின் இறப்பை அறிவித்து இரண்டு மாதங்களுக்குள் அவருக்கு உரித்தான இறப்பு உதவுதொகையை செலுத்த வேண்டிய போதிலும் ரூபா 2,705,000 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய இறப்பு உதவுதொகையில் ரூபா 1,710,000 தொகை 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் இறந்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய இறப்பு உதவுதொகையாகக் காணப்பட்டது. இதன் படி இறப்பு நேர்ந்து சங்கத்திற்கு அறிவித்ததை அடுத்து சங்கத்தால் இறப்பு உதவுதொகை செலுத்தும் முறையான வழிமுறை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நியதிச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் II ஆம் பிரிவு | ஆதனக் கடனுக்காக குத்தகைக்கிடப்பட்ட ஆதனங்களில் நிலவிய நிலைமையும் அவற்றின் பெறுமதியும் தொடர்பாக கட்டுப்பாட்டுக் குழுவால் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைக்கிடப்பட்ட அனைத்தும் மீளக் கருத்திற்கொள்ளப்பட வேண்டியதுடன் குத்தகைக்கிடப்பட்ட ஆதனங்களின் நிலைமை மற்றும் பெறுமதி தொடர்பாக பரீட்சிக்க வேண்டுமென கட்டுப்பாட்டுச் சபைக்குத் தென்பட்டால் கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் குழுவின் மூலம் பரீட்சிக்கப்பட வேண்டும். எனினும், குத்தகைக்கிடப்பட்ட ஆதனங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு பரீட்சிக்கப்பட வேண்டிய ஆதனம் உள்ளதா என இனங்காணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 1891 இன் 05 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 12 – V ஆம் உப பிரிவு மற்றும் 12 – VII உப பிரிவு | பதவியணிக்கு ஆதனக் கடன் வழங்கப்படுகையில் தொழிற்துறை மதிப்பீட்டாளர்கள் இருவரின் மதிப்பீட்டு அறிக்கைகளும் கடன் தொகையும் உள்ளடக்கப்படுவதற்காக தற்காலிக உறுதிப்படுத்தல் உறுதியொன்றுடன் கடன் பிணைக் காப்புறுதி உறுதி ஒன்று அக் கடன் தொகைக்காக விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சங்கத்தால் 2013 ஆம் ஆண்டின் போது பதவியணிக்கு ஆதனக் கடன் செலுத்துகையில் மேற்குறித்தவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (v) | 1891 இன் 05 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2007 சனவரி 05 ஆம் திகதிய திருத்தப்பட்ட நியதிச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(I) ஆம் பிரிவு மற்றும் 5(II) ஆம் பிரிவு | கடன்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வட்டியின் அளவு ஒரு வருடத்திற்கு 12 சதவீதமான போதிலும் வட்டி அறவிடப்பட வேண்டிய மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தின் பத்தாம் திகதி அல்லது இதற்கு முன்னர் வட்டி கிரமமாகச் செலுத்தப்படும் காலத்தில் அறவிடப்பட வேண்டிய வட்டியின் அளவு 9 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், இலங்கை மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி அளவிற்கு இணங்க வட்டியின் அளவு மாற்றப்படுவதற்கு கட்டுப்பாட்டுச் சபைக்கு இயன்ற போதிலும் ஆதனத்தை பிணையில் வைத்து அங்கத்தவர்களுக்கு பணத்தைக் கடனுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட நாட்களில் நிலவிய 12 சதவீத வட்டி வீதம் தொடர்ந்து அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் மத்திய வங்கியின் வட்டி வீதம் தொடர்பாக மீளாய்வொன்று கட்டுப்பாட்டுச் சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சங்கத்தின் செயற்பாட்டு விளைவுகள் (வரிக்குப் பின்னர்) ரூபா 35,738,993 தேறிய இலாபமானதுடன் முன்னைய ஆண்டின் இதற்கொப்பான (வரிக்குப் பின்னர்) தேறிய இலாபம் ரூபா 28,705,879 ஆனமையால் மீளாய்வாண்டிற்காக சங்கத்தின் இலாபத்தில் ரூபா 7,033,114 ஆன அதாவது 24.05 சதவீத அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. இவ் அதிகரிப்பிற்கு கடன் வட்டி வருமானம் அதிகரித்தமையே காரணமாகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

**(அ) சங்கத்தின் நல்லாட்சிக்கான கட்டுப்பாட்டுக் குழுவின் பங்களிப்பும் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களுக்கான அங்கத்தவர்களின் பங்களிப்பும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாதாந்தமும் 20 விசேட கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி குழுக் கூட்டங்களிலிருந்து கேட்டு விலகியிருந்தமையால் அவர் கலந்துகொள்ளப்பட வேண்டியிருந்த 13 கூட்டங்களில் 07 கூட்டங்களுக்கு மாத்திரமும் ஏனைய பிரதிநிதி 13 கூட்டங்களில் 08 கூட்டங்களுக்கு மாத்திரமும் கலந்துகொண்டிருந்தனர்.

(ii) குழுக்களுக்குச் சமூகமளிப்பது தொடர்பான விபரங்களின் அடிப்படையில் மாதாந்தக் கட்டுப்பாட்டு குழு, மேலதிக கட்டுப்பாட்டுக் குழுக்கள் மற்றும் உப குழுக் கூட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட சில அங்கத்துவர்கள் அக்குழுக் கூட்டங்களுக்கு குறைவாகவே சமூகமளித்திருந்தனர். இதனால், சங்கத்தின் அபிவிருத்தி தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது, சில குழு அங்கத்தவர்களிடமிருந்து, போதியளவு பங்களிப்பு சங்கத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) அங்கத்துவம்**

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் அங்கத்துவம் தொடர்பாக பரீட்சிக்கையில் 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளின் போது அங்கத்துவம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| சனவரி 01 ஆந் திகதியில் அங்கத்தும் எண்ணிக்கை | 10,727 | 10,664 | 10,947 | 10,982 | 11,091 |
| கூட்டுக : | | | | | |
| புதிய ஆட்சேர்ப்பு | 363 | 671 | 393 | 358 | 583 |
| மீண்டும் அங்கத்துவத்தைப் பெறல் | 48 | 35 | 22 | 13 | 6 |
| கழி :- | | | | | |
| அங்கத்துவத்திலிருந்து விலகல் | 474 | 423 | 380 | 262 | 210 |
| திசெம்பர் 31 இல் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 10,664 | 10,947 | 10,982 | 11,091 | 11,470 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10,664 ஆக இருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2013 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் 11,470 வரை அதிகரித்திருந்தது. முன்னைய ஐந்து ஆண்டுகளில் மிகப் பாரிய அளவில் அரச சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும் சங்கத்தின் புதிய அங்கத்தவர்களாக 2,368 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

இதன் பிரகாரம், சங்கத்தின் புதிய அங்கத்துவத்தை அதிகரித்து அங்கத்தவர்களை தக்கவைத்துக்கொள்வதற்காக அர்த்தமுள்ள ஓர் முறை சங்கத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தவர்களின் வருகை**

ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்காக அங்கத்தவர்களை தெரிவு செய்யப்படுகின்ற போதிலும், அவ் ஆண்டுப் பொதுக் கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் வருகை மிகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதனால் கட்டுப்பாட்டு சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல், ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது பிரேரனைகளை நிறைவேற்றுதல் அதிக அங்கத்தவர்களின் பிரதிநிதித்துவ அடிப்படையில் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நிலைமை சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிலும்

கடந்த ஆறு ஆண்டுகளிலும் பொதுக்கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் வருகை பின்வருமாறு குறைவு ஏற்பட்டிருந்த போதிலும் அந்நிலையிலிருந்து விடுபடுவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்தமைக்கு சான்றுகள் இருக்கவில்லை.

| ஆண்டு | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | பொதுக்கூட்டங்களுக்கு வருகை தந்நதவர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 2013 | 11,470 | 1,502 | 13.09 |
| 2012 | 11,091 | 1,377 | 12.42 |
| 2011 | 10,982 | 1,363 | 12.41 |
| 2010 | 10,947 | 1,334 | 12.18 |
| 2009 | 10,664 | 1,185 | 11.11 |
| 2008 | 10,727 | 1,037 | 9.67 |
| 2007 | 10,897 | 976 | 8.96 |

## 4.2 கடன் முகாமைத்துவத்தில் காணப்பட்ட பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தெரிவுக் கணக்காய்வின் போது ஆதனக் கடன் செலுத்தப்பட்டிருந்த 8 அங்கத்தவர்களிடமிருந்து கூடுதலாகப் பணம் அறவிடப்பட்டிருந்தமையால் அவர்களின் அங்கத்துவக் கடன் புத்தகங்களில் ரூபா 18,003 மறை மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இறுதியாகக் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்பட்ட திகதியின் படி அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,971,583 தொகையான 64 சம்பளக் கடன் மீதிகளும், ரூபா 458,741 தொகையான 53 பங்களிப்புத் தொகை மீதிகளும், ரூபா 58,873 தொகையான 6 இறப்பு உதவுதொகைக் கடன் மீதிகளும், நீண்டகாலமாக விளைவற்ற கடன் மீதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) அங்கத்துவ இல. 16857 பாஸ் புத்தகப் பரிசீலனையின் போது அங்கத்துவ சேமிப்புத் தொகை இல்லாத போதிலும் அறவிடப்பட வேண்டிய அங்கத்துவக் கடன் தொகையான ரூபா 44,885

தொகையும் சம்பளக் கடன் தொகையான ரூபா 57,633 தொகையுமாக ரூபா 102,518 கூட்டுத்தொகை நிலவியதுடன் 2009 செப்தெம்பர் 14 ஆம் திகதியின் பின்னர் எவ்வித கடன் தவணைப்பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 72,785 கூட்டுத்தொகையான கணனிக் கடன் வழங்கப்பட்டிருந்த இரு அங்கத்தவர்களிடமிருந்து எவ்வித தவணைப்பணமும் வட்டித்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.3 முகாமைத்துவத் திறமையீனங்கள்

அங்கத்தவர்களின் நலனுக்காக விடுமுறை விடுதியொன்று நிர்மாணிக்கப்படுவதற்கு 2013 ஒக்டோபர் 31 ஆம் திகதி அத்திவாரம் இடப்பட்டிருந்த போதிலும் அதன் நிர்மாணிப்பு வேலைகள் 2014 யூன் 30 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சங்கக் கட்டிடத்தின் கீழ் மாடி, வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த நிறுவனம் 2013 மார்ச் மாதம் விட்டுச்சென்றிருந்த போதிலும், பொருட்களில் சிலவற்றை அகற்றியிராமையால் அந் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகையாக ரூபா 207,000 காண்பிக்கப்பட்டிருந்தது. அத் தொகையின் அறவீடு நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

### 4.5 ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவி வெற்றிடம் நிலவியமை

சங்கத்தின் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிக்காக ஓர் உத்தியோகத்தர் 2011 யூன் 01 ஆம் திகதி முதல் 2013 யூன் 11 ஆம் திகதி வரை நியமிக்கப்பட்டிராததுடன் உதவிச் செயலாளராகச் சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் அந்நாள் முதல் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். 2013 யூன் 12 ஆம் திகதி ஆட்சேர்க்கப்பட்டிருந் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் மீள 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் நீங்கியிருந்தார். சங்கத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தர் பதவி இவ்வாறு வெற்றிடமாக நிலவியமை சங்கத்தின் முகாமைத்துவத்தின் பலவீனமென்பது அவதானிக்கப்பட்டது.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சங்கத்தால் ரூபா 10,000 ஆன வைப்புச் செய்து 1995 ஆம் ஆண்டு முதல் இலங்கை வங்கியின் காப்பகம் பேணப்பட்டிருந்தது. தற்போது நிறுவகத்தின் சகல ஆவணங்களும் சங்கத்திற்கு உரித்தான கட்டிடத்தில் பேணப்பட்டிருக்கையில் மீளாய்வாண்டின் போதும் காப்பகம் ஒன்று பேணப்படுவதற்காக ரூபா 4,000 தொகையான கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 கட்டிட நிதியம்

கட்டிட நிதியத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 10,774,103 தொகை நிலவிய போதிலும் இதில் ரூபா 1,877,350 தொகை நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,683,866 தொகையான சம்பளக் கடன் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்பட்டு 7 சதவீதப்படியான வட்டி நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

நியதிச்சட்டத்தின் 19.1 ஆ பிரிவின் பிரிவின் பிரகாரம் இந் நிதியம் சம்பளக் கடன் செலுத்தப்படுவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால் ரூபா 6,683,866 தொகையான பணம் சம்பளக் கடன் கொடுப்பனவிற்காகப் பயன்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் இருக்கவில்லை.

## 4.8 கணனி முறைமையின் பலவீனங்கள்

சங்கத்தின் செயற்பாடுகளுக்கான கணனி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படுவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 970,000 தொகை 5 கட்டங்களைக் கொண்ட ஒப்பந்தம் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் முதலாம் கட்டத்திற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 225,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய கட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்படுத்தப்பட்ட கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) முடிவுக் கணக்குகளைத் தயாரிக்கக் கூடிய கணனி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் வழங்கப்பட்டிருந்த கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முடிவுக் கணக்குகளைத் தயாரிக்க முடியாதிருந்தது.

(ஆ) வருமானச் செலவினக் கணக்குகளில் ஆரம்ப மீதி நிலவியமை.

(இ) நானாவித கடன்பட்டோர் தொடர்பில் கணனி முறைமையில் காண்பிக்கப்பட்ட தரவுகளில் குறைபாடு நிலவியது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

சங்கத்தால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

சங்கத்தின் உள்ளகக் கணக்காய்விற்காக போதிய பதவியணி ஈடுபடுத்தப்பட்டு ஆக்கபூர்வமான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படுவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு தரவுகளுக்கும் உள்ளவாறான தரவுகளுக்குமிடையே 48 விடயங்களில் 10 சதவீதம் முதல் 138 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க அளவான விலகல்கள் காணப்பட்டமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சங்கத்தின் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணனி முறைமை
(ஆ) மரண உதவுதொகை முறைமை
(இ) கட்டிட நிதியம்
(ஈ) அங்கத்துவத்தை அதிகரித்தல்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஊ) அங்கத்தவர் கடன்
(எ) பாதீடு
(ஏ) அங்கத்துவக் கடன்
(ஐ) நிலையான சொத்துக்கள்
(ஒ) கட்டுப்பாட்டுக் குழுச் செயற்பாடு